AstroVed

மாலை: 1

# சத்வித்யா

மலர்: 15

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

மாதம் இரு முறை
வெளிவரும்
ஏப்ரல் 1முதல்
15வரை

ஆன்மீக
விஞ்ஞான
இதழ்



## அரசாங்கத்தில் செல்வாக்கு பெற

- ஹயக்ரீவர் எந்திரம்
- அழுக்குச் சித்தர்
- வாராஹி தேவி
- மூலிகை ரகசியம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



இந்து மதம் என்கிற சனாதன தர்மத்தில் கூறப்பட்டுள்ள அனைத்துமே அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. நமது இந்து தர்மத்தில் இலைகளுக்குக் கூட ஆற்றல் உள்ளது என்பதை மேல் நாட்டு அறிஞர் ஒருவர் அறிவியல் பூர்வமாக நிரூபித்திருக்கிறார்.
குறிப்பாக துளசி இலைக்கு உள்ள ஆற்றல் ஏகாதசி நாளில் பல மடங்கு சக்தியைப் பெறுகிறது. வில்வ இலை சிவ ராத்திரி இரவில் அபரிமிதமான சக்தியுடன் விளங்குகிறது என்பதை அறிவியல் கருவிகளைக் கொண்டு ஆணித்தரமாக நிரூபித்துள்ளார்.
இவைகளின் இந்த ஆற்றல் மனிதனிடத்தில் பல நல்ல தாக்கங்களையும் ஏற்படுத்துவதாய் கண்டறியப்பட்டுள்ளது.

~ Dr. Baskaran Pillai




அன்பு ‘சத்வித்யா’ வாசக உள்ளங்களே!
எந்த துன்பம் வரினும் இறையருள் கைகொடுக்கும் என்ற நம்பிக்கையோடு வாழுகின்ற இனிய நெஞ்சங்களுக்கு சொந்தக்காரர்கள் நீங்கள்!
உயிர்க்கொல்லி நோயான கொரோனாவின் இரண்டாம் அலை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. இதிலிருந்து தற்காத்துக்கொள்ள எளிய வழிகள, அதாவது, கபசுர குடிநீர் போன்றவை இருப்பதை பயன்படுத்தி பாதுகாத்துக் கொள்ளலாம். முகக்கவசம், சமூக இடைவெளி போன்றவற்றைக் கடைபிடித்து கொரோனாவை விரட்டுவோம். ஆன்மீகம் காட்டும் வழியில் சென்று அகிலத்தை வெல்வோம்.


(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# அழுக்குச் சித்தர்

நம்ம சத்வித்யா வாசகர்களுக்கு இந்த இதழில் நாம் அறிமுகம் செய்யவிருக்கும் சித்தர் அழுக்குச் சித்தர்! இவரோட ஜீவசமாதி கொங்கு மண்டலத்தில் உள்ள ஆனைமலை என்கிற தலத்தில் அமைந்துள்ளது.

இவருடைய ஜீவசமாதி அமைந்துள்ள இடம். சத்யேந்திர சித்தர் பீடம் என்று அழைக்கப்படுகிறது. இதன் அருகில் உள்ள பெருமாள் மலை என்னும் அற்புதமலை, பல மூலிகைகளை கொண்டதாய் விளங்குகிறது.

இவருக்கு அழுக்குச் சித்தர் என்று பெயர் வந்தது எதனால்'? என்று ஆராயும் பொழுது இது காரணப் பெயர் என்றே தெரிய வருகிறது. இவருடைய இயற்பெயர் சத்தியேந்திரர் என அறியப்படுகின்றது.



ஸ்ரீ ல ஸ்ரீ அழுக்குச்சித்தர்

இவர் தனது தேகத்தில் சுரந்த, நவபாஷாணத்தையே மிஞ்சுகின்ற ஔஷதம் என்னும் அழுக்கினைத் திரட்டி, தன்னை நாடி வந்த பக்தர்களின் உடற்பிணிகளை தீர்த்து வைத்தார் என்றும் அதனாலேயே இவருக்கு அழுக்குச் சித்தர் என்ற பெயர் நிலைத்து நிற்பதாகவும் அறியப்படுகிறது.

இவர் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து இங்கே ஜீவசமாதி அடைந்தவர் என்று கூறுகிறார்கள். அருகிலே உள்ள வேட்டைக்காரன் புதூரில் இருந்த இவர் , அடிக்கடி இங்கு வந்து பெருமாள் மலையை சுற்றியுள்ள இடங்களில் அமர்ந்து தியானம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தாராம். இறுதியில் இந்த இடத்தையே தான் ஜீவசமாதி அடைய தேர்ந்தெடுத்துள்ளார்! அழுக்குச் சித்தரின் அருளாற்றல் முழுவதும் நிரம்பப் பெற்ற இந்த இடத்தில் இப்போது மக்களுக்கு சேவை செய்கின்ற சத்தியேந்திர சித்தர் பீடம் எனும் பெயரில் பக்தர்களுக்கு பிணிதீர்க்கும் சேவை தொடர்ந்து நடந்து வருகிறது.

முப்பத்து ஆறு வயதுவரை மட்டுமே வாழ்ந்த சத்தியேந்தரர் கடைசி மூன்று வருடங்களில் அடைந்த தோற்றம் பரவச ரூபம் எனப்படுகிறது. பால பருவத்தைக் கடந்து இறையோடு ஐக்கியம் என்கிற பரவசம் அடைகின்ற வரையில் இருந்த தோற்றத்தினை சத்திய ரூபம் என்கிறார்கள்.

பதினெட்டு சித்தர்களில் முதல் ஒன்பது சித்தர்களின் ஒளி ரூபத்தை ஒன்றாய் ஐக்கியமாக்கி இந்த பூமியில் அகத்திய பெருமானின் திருவாக்குப்படி பஞ்ச பூதங்களில் ஒன்றான நெருப்பின் அவதாரமாகத் தோன்றியவர் தான் அழுக்குச் சித்தர்! அமைதி, சமாதானம் இவற்றைக் குறிக்கும் சில வெள்ளை நிற வேட்டி சட்டை தலைப்பாகையோடு சுகாசனத்தில் கருணை பொழியும் கண்களோடு ஆனைமலை

சத்தியேந்திரர் பீடத்தில் சத்திய ரூபத்தில் அருளாசி தருகிறார், நம் அழுக்குச் சித்தர்! அழுக்கு சாமிகள் மகா குரு என்கிற பெயரில் ராஜ அலங்காரத்தில் ராஜ ரூபமாகவும் காட்சியளிக்கிறார் இதற்கு காரணம் உலகில் உள்ள நான்கு வித யோகங்களான பக்தி யோகம், ஞானயோகம், கர்மயோகம், ஹட யோகம் என்னும் நான்கு வகை யோகங்களின் கலவையான சதுர் யோகத்தினை மக்களுக்கு போதித்ததால் மஹா ராஜ யோகத்தில் காட்சி தருகிறார்.

மேற்கண்ட நான்கு யோகத்தைக் காட்டிலும் இவற்றுடன் சேர்த்து சத்குரு யோகத்தையும் அறிமுகப்படுத்தினார்.

இவருடைய உபதேசங்களில் முக்கியமானது முத்திரை யோகமாகும் பிரபஞ்ச சக்திகளான பஞ்சபூத சக்திகளை சமநிலையில் வைப்பதே சித்த முறையாகும். முத்திரைகளை முறையாக செய்வதன் மூலம் உடலில் உள்ள பிணிகளை மட்டுமின்றி வீட்டில் உள்ள வாஸ்து குறைபாடுகளைக் கூட சரி செய்ய முடியும் என்று உணர்த்தினார். நம்முடைய அழுக்குச் சித்தர்

ஆனைமலைச் சாரலில் அமைந்துள்ள இந்த சத்தியேந்திர சித்தர் பீடம், சித்த வழிபாட்டினை பரிசுத்தமாக வெளிப்படுத்தும் ஆன்மீக மையமாக விளங்கி கொண்டிருக்கிறது. நோய் நொடிகளைத் தீர்த்து வைக்கும் மருத்துவமனையாகவும் மூலிகை ஆராய்ச்சி மையத்துடன் கூடிய இலவச மருத்துவமனையாகவும் இன்றும் செயல்பட்டு வருகிறது. இந்த சித்தர் பீடம்!

மற்ற சித்தர்களின் ஜீவசமாதிகள் போல இவரது ஜீவசமாதியின் மீது சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்படாமல் சமாதி மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு அபிஷேகம் ஆராதனை விபூதி குங்குமம் என எந்த வழிபாடும் செய்யப்படுவது இல்லை. ஆன்மாவுக்குத் தரப்படும் அகக்குளியல் மட்டுமே இங்குவரும் பக்தர்கள் பெறுகின்றார்கள்.

வேதங்கள் ஓதுவதைக் காட்டிலும் தவம் , தியானம், ஆத்ம அர்ப்பணிப்பு போன்றவற்றின் மூலமே இறைவனை அடைய முடியும் என்று நிரூபித்த ராஜயோகி சித்தேந்திரரை அழுக்குச் சித்தர் என்ற நிலையில் ஆனைமலை சென்று வணங்குவோம்! அவர் அருளுவார்!

~ ரா. பன்னீர்செல்வம்

# வைத்தீஸ்வரன் கோயில் எனும் அருள்மிகு வைத்தியநாதர் திருக்கோயில்

மிகவும் புகழ்மிக்க ஊர் வைத்தீஸ்வரன் கோயில்!

கோயில் பெயரிலேயே ஊர் அமைந்துள்ளது. பசுமை படர்ந்த பூமி என்றால் அது மிகையில்லை பசுஞ் சோலைகள் கொண்டும். இயற்கை எழில் மிகுந்தும் காணப்பெறுகின்ற இனிய ஊரே வைத்தீஸ்வரன் கோயில். ஈசனே வைத்திய நாதனாக எழுந்தருளி உள்ளார் என்பது கூடுதல் சிறப்பு! சென்னை பெரும்பாக்கத்தில் இதே பெயரில் திருக்கோயில் கொண்டுள்ளார். சென்னை திருவான்மியூரிலும் ஸ்ரீ



மருந்தீஸ்வரராக அருட்காட்சி அளித்து பக்தர்களின் தீராத நோய்களை தீர்த்து திருவருள் புரிந்து வருகின்றார் ஈசன் என்பதை அறிவோம். திருப்புள்ளிருக்கு வேளூர் என வழங்கப்பெறும் இத்தலம் சீர்காழிக்கு தெற்கே 6 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள அற்புதமான திருக்கோயில்.

புள்ளிருக்கும் வேளூர் என்றால் என்ன என்பதை பார்ப்போம். புள் - சடாயு இருக்கு - இருக்கு வேதம் வேள் - முருகன் ஊர் - சூரியன் ஆகியோர் இத்தல ஈசனை வழிபட்ட தலம் என்பதால் புள்ளிருக்கும் வேளூர் என்று அழைக்கப் பெறுகின்றது.

இத்தல இறைவன் - ஸ்ரீ வைத்திய நாதர்

இத்தல இறைவி - ஸ்ரீ தையல் நாயகி அம்பிகை

தல விருட்சம் - வேம்பு

தல தீர்த்தம் - சித்தாமிர்தம் திருக்குளம்.

இத்தலத்தில் முருகப் பெருமான் மிகுந்த எழில் நலத்துடன் எழுந்தருளி கோடானுகோடி பக்தர்களுக்கு குல தெய்வமாக குமரன் அருள் நலம் புரிகிற அழகே அழகு!

ஸ்ரீ முத்துக்குமார சுவாமி சந்நிதியை வழிபட பூர்வ ஜென்மத்தில் புண்ணியம் செய்து இருக்க வேண்டும். ஸ்ரீ செல்வ முத்துக்குமார சுவாமி ஸ்ரீ தேவசேனா ஸ்ரீ வள்ளி சமேத ஸ்ரீ முருகப் பெருமான் அருள் நலம் புரிகின்றார்

அர்த்த ஜாம வழிபாடு தாலாட்டுப்பாடி இவருக்கே சிறப்பாக செய்யப் பெறுகிறது இறைவன்,

இறைவிக்கு எளிய தீபாராதனை மட்டுமே செய்யப்படுகிறது. பங்குனி உத்திரம்- கிருத்திகைகள் குறிப்பாக தை- ஆடி கிருத்திகைகளில் மிகவும் சிறப்பாக கொண்டாடப் படுகிறது.
அங்காரகன் (செவ்வாய்) வழிபாடு செய்ய உகந்த பரிகாரத் தலம்.
தன்வந்திரி என்ற மகா வைத்திய சித்தர் ஐக்கியமான திருத்தலம் என்பதால், இக்கோயில் குளத்தில் மூழ்கி எழுந்தால் தீராத வியாதிகளை தீர்க்கும் அரிய தலம் என்பது புராணச் செய்தி ஆகும்.
நோயால் வருந்துகிறவர்கள் இக்கோயிலில் தரப்படும் விபூதி மருந்து உருண்டைகளை பயபக்தியுடன் வாங்கி உண்டால் நோயின் கொடுமையில் இருந்து விடுபடலாம் என்பது ஐதீகம்.
பல ஆண்டுகளுக்கு முன்பு எனது தந்தையார் சென்னையை பூர்வீகமாக கொண்டவர். எனது தாயார் கடலூரில் பிறந்து வளர்ந்தவர். எனது பெற்றோருக்கு திருமணமான புதிதில் எனது தந்தைக்கு சியாட்டிகா என்ற நோயின் காரணமாக குனிந்தால் நிமிர முடியாத நிலையும் கடுமையான வலியால் பெரிதும் துடித்துக் கொண்டிருந்தார். எவ்வளவோ பணம் செலவழித்தும் பல்வேறு மருத்துவ மனைகளில் காட்டியும் எவ்வித பிரயோஜனமும் இல்லாமல் போகவே என் தாத்தா எனது தாயாரின் தந்தை அவரை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு அழைத்த போது எனது தந்தை மறுத்து விட்டார். எனது தாயாரும் எனது தாத்தாவும் மிகவும் வற்புறுத்தியதால் அரை மனதோடு ஒத்துக்கொண்டு நடக்க முடியாமலும், நிமிர முடியாமலும், கொடுமையான வலியோடும் மற்றவர்கள் துணையோடு ரயிலில் சென்றார் எனது தந்தையார்.

வைத்தீஸ்வரன் கோயிலில் அருள்மிகு வைத்திய நாதரை தரிசித்து அழுதார் எனது தந்தை- மருந்து உருண்டைகளை மிகுந்த பயபக்தியுடன் உண்டு- கோயில் குளத்தில் மற்றவர்கள் துணையுடன் மூழ்கி எழுந்தார்.

என்ன ஒரு முருகனின் அருள்நலம்! சர்வேஸ்வரனின் மலர்க்கருணையால் ஸ்ரீ வைத்தீஸ்வரன் பேரருள் துணையினால் சாதாரணமாக இயல்பாக நிமிர்ந்து நின்றார். இரண்டு கரங்களையும் தலைக்கு மேலே உயர்த்தி கோபுரத்தை பார்த்து வணங்கினார். அன்று நிமிர்ந்தவர் தான் ஆயுள் முழுவதும் அந்த நோய் அவரை ஒன்றும் செய்ய வில்லை.

மனம் மொழி மெய் ஒன்றுபட வைத்தியநாதர் தையல் நாயகி என்று பக்தி சிரத்தையுடன் நோயுற்றவருக்கு விபூதி பூசி வழிபட்டால் நிச்சயம் நோயின் கொடூரத் தன்மை நீங்கும். நோயுற்றவர்கள் கடும் பிணி நீங்கப் பெறுவர்.
ஈசன் திருமுடியில் சித்தர் அமிழ்தத்தால் அபிஷேகம் செய்த போது அவ்வமுதம் இந்த தீர்த்தத்தில் வந்து கலந்தமையால் இந்த தீர்த்தம் சித்தாமிர்தம் எனப் பெயர் கொண்டுள்ளது.
தீராத வியாதிகள் கூட இத்தல இறைவன் இறைவியின் மலர்க்கருணையினால் பரிபூரண நலம் பெறுவர்.
ஆன்மீக அருள் நலம் மிக்க இந்த ஆலயத்தை தரிசித்து ஆன்ம நலமும் பெறுவோம்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

## மந்திர மகிமை

# அரசாங்கத்தில் செல்வாக்கு பெற.

சௌந்தர்ய லஹரியில் அருளப்பட்டுள்ள 2வது பாடலானது அரசாங்கத்தில் செல்வாக்கு பெற வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட அனைவருக்கும் அந்த ஆர்வத்தை பூர்த்தி செய்யக்கூடிய மந்திரமாக அமைந்துள்ளது அதனைப் பற்றி இப்பகுதியில் பார்ப்போம்.



### மந்திரப் பாடல்:

"முகம் பிந்தும் க்ருத்வா குசுயுக- மதஸ் தஸ்யதததோ
ஹரார்த்தம் த்யாயேத்யோ ஹரமஷிஷிதே மன்மதகானம்
லெ ஸமத்ய லரம் கோஷாபம் நம்தி வநிதா இத்யதிரகு
த்ரிலோ கீ மய்யாக ப்ரமயதி ரவீந்து- ஸ் தனயுகாம்."

### பாடலின் பொருள்:

பரமனின் பாதியாய் நிற்பவளே ஸ்ரீ சக்ரத்தின் மையப் புள்ளியையே உன் முகமாய் எண்ணி, அதற்குக் கீழே உள்ள உனது தனங்களையும் அதனடியில் உள்ள யோணியையும் தியனம் செய்து, உனது காம கலையாகிய 'க்லீம் என்னும் சொல்லை தியானிக்கின்ற எவருக்கும் காமசக்திகளை வசப்படுத்தும் ஆற்றலை கொடுத்து, அனைவரையும் அவனிடம் வசியமாக்குகிறாய்! சூரிய, சந்திரரையே தம்மிரு தனங்களாகக் கொண்ட, மூவுலகில் உள்ள பெண்களையும் மயக்கும் ஆற்றல் கொண்ட இவனிடம் அரசாங்க செல்வாக்கு கூடுவது எளிது தானே?

### மந்திரத்தை பிரயோகிக்கும் முறை:

இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை தங்கத் தகடு அல்லது சந்தனம் அல்லது விபூதியிலோ வரைந்து கொள்ள வேண்டும்.

தினமும் 100 தடவை வடக்குமுகமாக அமர்ந்து 27 நாட்களுக்கு ஜபிக்கவும்.

குங்குமம் கலந்த அட்சதை கொண்டு துர்கா அஷ்டோத்ர அர்ச்சனை செய்தல் நலம்! தினமும் பழங்கள், தேன், பால் சாதம் கொண்டு நைவேத்யம் செய்வது நல்ல பலன்களைத் தரும்.

மேற்கண்ட முறைப்படி மந்திரப் பிரயோகம் செய்வதால் அரசாங்க செல்வாக்கு தேடி வருவதோடு கொடிய விலங்குகளைக் கூட பழக்கி, கட்டுப்படுத்தும் அற்புத ஆற்றலும் வந்து சேரும்.

~ ரா. பன்னீர்செல்வம்

# நடராச மகா தத்துவம்

"தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவருக்கும் இறைவா போற்றி"



எல்லாம் வல்ல சிவபரம்பொருளை சேக்கிழார் பெருமான் செம்பொருள் என மொழிகின்றார். தில்லை! எல்லையே இல்லா ஆனந்தப் பெருவெளி! அம்பிகை சிவகாம சுந்தரியுடன் சிவராசன் புரியும் ஆனந்த திரு நடனம் எதற்காக? அகிலங்கள் அதிர ஆடுவது ஏன்? சிவனருளால் சிந்திப்போம்.
முப்பத்தாறு சிவமகா தத்துவங்களை உணர்த்தவே இந்த ஆனந்த கூத்து கூத்தபிரான் என்பதே ஈசனின் திருநாமம்! தில்லையுள் கூத்தன் தென் பாண்டி நாட்டன் என்பது ஆன்றோர்தம் ஆன்ம அருள் வாக்காகும்.
கனக சபையில் ஆடுவது நம் இதய சபையிலும் எதிரொலிக்கிறது! அனைத்து உயிரினங்களும் ஜீவிக்க- சிவன் ஆடிக்களிக்கின்றான். அவனன்றி ஒரு பொருளும் அசையாது என்பதுதான் நிதர்சனமான உண்மை.
தொன்மையான மகா சிவாலயங்களில் சிகரமாக கருதப்படும் சிதம்பரம் உலகின் மையப்புள்ளி. அங்கிங்கெனாது எங்கும் நிறைந்த பரம் பொருள் நம்மை பாதுகாக்கின்றது. சிதம்பரத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில்- ஆருத்ரா தரிசனம் பெறுவோர் பேறு பெற்றோர்!

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடதாரே" என்ற அப்பர் பெருமான்

குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிழ் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்
பாதமும் காணப் பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே

தில்லை நடராச மூர்த்தியை மனமுருக தரிசிப்பதற்காக மனித பிறவியை விழைகின்றார். திருவார் வளந்திகழ் தில்லை நடராசப் பெருமான் திருவடியில் தம்மை ஆட்படுத்திக் கொண்டோர் ஆனந்த களிப்பில் திளைத்திருப்பர். சிதம்பரத்தில் ஆனித் திருமஞ்சன தெய்வீக நிகழ்வில் மகா

அபிஷேகம் காண கண் கோடி வேண்டும்.
அபிஷேகப் பிரியரான நடராஜப் பெருமான் வடிவழகை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை தூக்கிய திருவடி துணை நமக்கு, தொழுது துதிப்பவருக்கு பயமெதற்கு என்ற பாடல்தானே நினைவுக்கு வரும்! சிவநேயச் செல்வரான அருள் வள்ளலார் என்னுடல் என்னுயிர் என்னறிவு எல்லாம் தன்னதென்றாக்கிய தயவுடைத் தாயே என்கின்றார். ஈசன் தாயுமானவன் தானே எதுவுமே தொடர்ந்து வருவன அல்ல'. திருக்கரத்தில் கனல் ஏந்தி நடனமிடும் ஈசன் தன் ஜடாமுடியில் பிறை நிலவை சூடியும் குளிர்ச்சி பொருந்திய கங்கையை வைத்தும் அருட்காட்சி அளிக்கின்றார் என்றென்றும் சிவப்பதம் மட்டுமே நிரந்தரமானது. பெருமானின் திருவடிகளை சரண் அடைந்தவர்கள் தெய்வங்கள் தேவர்கள் பூதகணங்கள். அஷ்டமா சித்தி கொண்ட முனிவர்கள் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியாம் உமா மகேஸ்வரியே கடுந்தவம் இருந்து ஈசனை அடைந்தாள் என்பது புராணச் செய்தி.
அடியவர்களின் இதய கமலங்களே ஈசன் எழுந்தருளும் தேர்! திருமுறை பதிகங்களே வடம்! அவ்வடத்தை பிடிப்போம். ஆடல் வல்லானின் வடிவழகில் லயித்து அடியவர்கள் ஒன்று கூடி ஓம் நமச்சிவாய என்று மனம் மொழி ஒன்றுபட வணங்கியே ஈசனருளால் நடராசரும் சிவகாம சுந்தரியும் திருத்தேரில் உலா வரட்டும் எல்லா உலகங்களும் உய்யட்டும்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்



உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும் சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்
www.priestservices.com
போன்: 88702 88701

# வாஞ்சிநாதர் ஆலயம்!

திருவாரூருக்கு அருகில் உள்ள சிவத்தலம் திருவாஞ்சியம் ஆகும்! ஸ்ரீ வாஞ்சியம் என்றும் சொல்வார்கள். காவிரிக் கரையில் அமைந்துள்ள சிவாலயங்களில் மிகவும் சிறப்பு பெற்றது இந்த வாஞ்சிநாதர் ஆலயம்!

இந்த ஆலயத்தின் சிறப்புகளில் ஒன்று இங்கே அமைந்திருக்கும் எமதர்மராஜன் சன்னதி. ஆலய ராஜகோபுரத்தைத் தாண்டி உட்சென்றவுடன் அக்கினி மூலையில் முதல் சன்னதியாக அமைந்துள்ளது எமன் சன்னதி சித்ரகுப்தரும் கருவறையில் எமனுடன் காட்சி தருகிறார்.



பாவ, புண்ணியங்களை மனிதன் செய்வதற்கேற்ப அவரவரின் ஆயுளை ஆராய்ந்து உயிர்களை எடுக்கும் எமனுக்கு ஒரு கவலை ஏற்பட்டது. பாரபட்சமின்றி ஆயுள் முடிந்த அத்தனை உயிர்களையும் எடுப்பதனால், அந்த பாவங்கள் தன்னை வந்து சேர்ந்து விடுமே என்று வருத்தமுற்ற எமன், சிவனை வேண்டிக் கொள்ள, இத்தலத்திற்கு வந்து குப்தகங்கையில் நீராடி, பாவ விமோசனம் பெறும்படி சிவன் சொல்ல அதன்படியே இங்கு பாவங்கள் நீங்கிய எமன் சன்னதி கொண்டு சிவபக்தர்களுக்கு ஆசி வழங்குகின்றார்.

இந்த சன்னதியில் தங்கள் வயது எத்தனையோ அத்தனை நெய்தீபங்கள் ஏற்றி, அர்ச்சனை செய்யும் பக்தர்களுக்கு எமபயம் தீரும் என்பது ஐதீகம்! இன்னொரு சிறப்பும் இங்கே உண்டு எமனுக்கு எதிரே அவருடைய வாகனமான எருமை இல்லாமல் இங்கே சிவனின் வாகனமான நந்திதேவர் வீற்றிருக்கிறார்.

அதுமட்டுமில்லாமல் தன் பாவங்களைப் போக்கிய சிவனிடம் எமன் வேண்டுகோள் ஒன்றை வைக்கிறார். அதாவது, "எனது பாவங்களைப் போக்கிய தங்களுக்கு இத்தலத்தின் நான் வாகனமாக இருக்க வேண்டும்" என்று கேட்க, அதற்கு ஈசனும் இசைகிறார். அதன்படி இங்கு வெள்ளியால் ஆன எமன் வாகனமாய் இருந்து சிவனை சுமக்கிறார்.

இங்கே உள்ள குப்தகங்கை என்னும் தீர்த்தம் பாவங்களை தீர்க்கும் ஆற்றல் கொண்டதாகும். எமனைப் போலவே கங்கைக்கும் ஒரு பயம் உண்டானது. உலகில் உள்ள அனைவரும் தன்னிடம் வந்து மூழ்கி பாவங்களைக் கழுவுவதால் தன்னிடம் ஏராளமான பாவங்கள் சேர்வதை எண்ணிய கங்கை, அந்த பாவங்களின் சுமைதாளாமல் இறைவனை வேண்டி நின்றாராம்.

அதற்கு சிவபெருமான், பிரளய காலத்தில் அழியாமல் இருந்த காசியைப் போலவே காவிரிக் கரையில் ஒரு தலம் அழியாமல் உள்ளது அதுவே ஸ்ரீ வாஞ்சியம் என்னும் தலம் என்று கூறி, அங்கு வந்து தன்னை வணங்கி, பாவங்களை போக்கிக் கொள்ளுமாறு கூறுகிறார். அதன்படி, புனித நதியான கங்கை, தன்னுடைய ஆயிரம் கலைகளில் ஒரு கலையை மட்டும் அங்கே விட்டு, மீதமுள்ள 999 கலைகளுடன் இத்தலத்து இறைவனை வணங்கி பாவ விமோசனம் பெற்றுள்ளார்.

எனவே, இந்த குப்தகங்கை தீர்த்தம் காசியில் உள்ள கங்கைக்கு இணையான புண்ணிய தீர்த்தமாக சிறப்பு பெற்றுள்ளது. இந்த ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்கள் முதலில் குப்தகங்கையில் நீராடி, அதன்பின் எமன் சன்னதியில் வழிபாடு முடித்து, அதன்பிறகே இறைவன் இறைவியை வணங்குதல் சிறப்பு!

தன்னை விட்டுப் பிரிந்த மகாலட்சுமி என்னும் ஸ்ரீயை அடைய, திருமால் விருப்பம் கொண்டு அதாவது வாஞ்சித்து, சிவனை வேண்டி நின்று, அதன்பின் தன் மனைவியான ஸ்ரீயை சிவனருளால் அடைந்தார் என்பதனால் ஸ்ரீ வாஞ்சியம் என்று இத்தலம் பெயர் பெற்றது.

இறைவன் சிவனே இங்கு எல்லாமாக இருப்பதால் இவ்வாலயத்தில் நவக்கிரகங்களுக்கு சன்னதி கிடையாது.

முதற் பிரகாரத்தில் ராகு, கேது ஒன்றாக ஒருருவாக காட்சி தருகிறார். நாகதோஷம் உள்ளவர்கள் இங்கு பாலாபிஷேகம் செய்து தோஷ நிவர்த்தி அடைகின்றனர்.
எதிரி பயம் உள்ளவர்கள் இவ்வாலயத்தில் உள்ள மகிஷாசுர மர்த்தினியை தாமரை மலர்கள் சூட்டி அர்ச்சிக்க, நன்மைகள் ஏற்படும். மகிஷாசுரனை தன் இடக்காலால் மிதித்து சம்ஹாரம் செய்யும் நிலையில் நின்ற கோலத்தில் எட்டு கரங்களுடன் அன்னை மகிஷாசுரமர்த்தினி அருளாசி வழங்கிக் கொண்டிருக்கிறார்.
பிரளய காலத்தில் அழியாத திருத்தலங்கள் இரண்டு ஒன்று காசி! இன்னொன்று ஸ்ரீவாஞ்சியம்! இங்குள்ள மூலவருக்கு முன்புறம் மற்றும் பின் புறத்தில் ஆராதனை செய்யப்படுகிறது. காரணம், பிரளயத்தின் போது இந்த மூல லிங்கம் திசை மாறியதாம். இது சுயம்புலிங்கமாகும். இத்தலத்திற்கு வந்து வணங்க எமபயமும் சாபங்களும் தீரும் என்பது இறையருள்!

~ ரா. பன்னீர்செல்வம்

# வாராஹி தேவி

## வாராஹி அம்மனை வீட்டில் வைத்து வணங்குவது நல்லதா...?

வாராஹி தேவி இயல்பாகவே உக்கிரமானவள் என்பதால், இந்த அம்மனை வணங்குவதற்கு அனைவருக்குமே மனதில் பயம் இருக்கும். வீட்டில் வாராகி திருவுருவப் படத்தை வைத்து வணங்குவதற்கு அஞ்சுவார்கள்.

நாம் எல்லோரும் நினைக்கும் அளவிற்கு வாராஹி தேவி கோப குணத்தை கொண்டவள் இல்லை. குழந்தை மனம் கொண்ட வாராஹி தேவியை தன்னலம் பாராமல், கெட்ட எண்ணங்களை மனதில் வைத்துக்கொள்ளாமல் வணங்கினால் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து உதவி செய்யும் தெய்வம் தான் இந்த வாராஹி அம்மன்.



பொதுவாகவே கிருத்திகை, பூரம், மூலம், ரேவதி இந்த 4 நட்சத்திரங்களை கொண்டவர்கள் வாராஹி அம்மனை மனதார வழிபட்டாலே போதும். அவர்களுக்கு உடனடியாக பலன் கிடைத்துவிடும். இந்த நட்சத்திரம் இல்லாதவர்கள், இந்த நட்சத்திரம் வரும் நாட்களில் வாராஹி அம்மனை வழிபடுவது சிறந்தது.

நமக்கு இருக்கும் தீராத கஷ்டமாக இருந்தாலும், தீராத நோயாக இருந்தாலும், தீராத மனக்கஷ்டம், பணக்கஷ்டம், எப்படிப்பட்ட கஷ்டமாக இருந்தாலும் வாராஹி அம்மனை நினைத்து, தலைவாழை இலை விரித்து, அதில் பச்சரிசியை கொட்டி பரப்பி, அதன் மேல் ஒரு தேங்காயை உடைத்து இரண்டுமுடிகளாக வைத்து, அதில் இலுப்ப எண்ணெய் ஊற்றி, சிவப்பு திரி போட்டு, தீபம் ஏற்றினால் போதும். இந்த பரிகாரத்தை உங்கள் வீட்டின் அருகில் வாராஹி அம்மன் கோவில் இருந்தால் அங்கு செய்யலாம். கோவிலுக்கு செல்ல முடியாதவர்கள் வீட்டிலேயே சிறிய வாராகி அம்மன் திருவுருவப் படத்தை வைத்து அதன்முன் செய்து வரலாம்.

வாராஹி அம்மனுக்கு சிவப்பு மலர் மிகவும் விருப்பமானது அதிலும் சிவப்பு தாமரை மிகவும் பிடிக்கும். பஞ்சமி திதி அன்று வராகியை மனதார நினைத்து வழிபடுவது நல்ல பலனைத்தரும்.

வராகி அம்மனுக்கு பூண்டு கலந்து தோல் நீக்கப்படாத உளுந்து வடை, நவதானிய அடை, மிளகு சேர்த்த வடை, வெண்ணை நீக்காத தயிர்சாதம், நவதானிய அடை தோசை இவைகள் அனைத்தும் மிகவும் பிடிக்கும்.

~ முகநூல் பதிவு

# விடாது கர்மா

சாந்த மூர்த்தி, ஆயிரம் கனவுகளுடன் தன் மகனின் ஜாதகத்தை ஒரு பையில் போட்டு, அதை தன் கையிலே பிடித்தபடி தனது வில் வண்டியில் அமர்ந்து கொண்டிருந்தார், வண்டிக்காரன் வையாபுரி தனது எஜமான் வண்டியில் வருவதால் சரியாகக் கூட உட்காராமல் "ஏய்'... ஏய் ..." என குரல் கொடுத்தபடி மாடுகளை உசுப்பி, ஒட்டிக் கொண்டிருந்தான்.
இரண்டு காளைகளும் சீராக- "ஆனால் சற்றே வேகத்தோடு வண்டியை இழுக்க, அவற்றின் கழுத்துப் பட்டையில் இருந்த சலங்கைகள் ஒரே கதியில் குலுங்கி, ஜல் ஜல் என இனிய ஒலியை எழுப்பிக் கொண்டிருக்க'. அந்த சலங்கை சத்தம் சாந்தமூர்த்தியின் சிந்தனைக்கு தாளகதியை கொடுத்துக் கொண்டிருந்தது.



அவரது சிந்தனை மூன்றாண்டுகளுக்கு முன் நடந்த சம்பவத்தை அசை போட்டது! இதே வில்வண்டி! தனது ஒரே மகன் சிவலிங்கத்தின் மனைவி- அதாவது தனது மருமகளை மருத்துவச்சி வீட்டுக்கு கொண்டு போனது நினைவில் நிழலாடியது! அன்று நிறைமாத கர்ப்பிணியான அவளுக்கு இடுப்புவலி கண்டதால் அவசர பயணம்! இந்த காளைகளின் சலங்கை சத்தம், தாளம் தவறி சோக கீதம் பாடியதாய் இவருக்கு தோன்றியது! நடந்தது இது தான!

இடுப்பு வலி, கண்ட மருமகள் யசோதாவை மருத்துவச்சியிடம் கொண்டு செல்ல, அப்படி இப்படி என ஏகப்பட்ட அவஸ்தைகளுக்குப் பின் ஆண் குழந்தையயை ஈன்றெடுத்தாள் யசோதா
தன் குலம் விளங்க வாரிசு வந்ததை எண்ணிப் பூரித்த சாந்தமூர்த்தி, தனது ஊர் மட்டுமல்ல; அக்கம் பக்கமுள்ள ஏழெட்டு கிராம மக்களை அழைத்து மாபெரும் விருந்து வைத்தார்! ஊரே போற்றிப் புகழும் வள்ளல் என பெயரெடுத்த சாந்தமூர்த்தி பெரும் செல்வந்தர் மட்டுமல்ல; நியாயமும் நேர்மையும் இரக்க குணமும் கொண்டவர் ஊரே அவரைப் பார்த்தால் தலை வணங்கும் அளவுக்கு உபகாரி; ஆனால், மிகுந்த கோபக்காரர்!

கோபம் இருக்கும் இடத்தில் தான் குணமிருக்கும் என்று எல்லோரும் போற்றினார்களே தவிர, அவரை தூற்றுவார் எவருமில்லை!
தன் வீட்டில் திருடவந்த ஒருவரை தென்னந்தோப்பில் கட்டி வைத்து அடிக்கச் செய்தவர், வேளா வேளைக்கு சாப்பாடு போட்டு, அதன் பின்னரே அவனை அடிக்கச் செய்தார்! யாரும் பசி என்று

சொன்னால் கண் கலங்கி விடுவார்!

வில்வண்டி ஒரு சிறு பள்ளத்தில் பட்டென இறங்கி ஏற, சிந்தனை கலைந்தவராய் சாலையை பார்த்தார்! மூன்று ஆண்டுகளுக்கு முன் பிறந்த தன் பேரனுக்கு அழகப்பன் என தன் தந்தையின் பெயரை சூட்டினார்! என்ன துரதிஷ்டமோ தெரியவில்லை! அந்த குழந்தை தாமதமாகத்தான் தவழ்ந்தது இன்னும் எழுந்து நிற்கவுமில்லை; நடக்கவும் இல்லை டவுன் ஆஸ்பத்திரி டாக்டர், பாரிச வாயுவின் தாக்கம் உள்ளதால் நடப்பதற்கு சில வருடங்கள் ஆகும் என்று சொல்லி விட்டார்!



இந்த நிலையில் தான் மருமகள் யசோதா மீண்டும் கர்ப்பமுற்றாள்! இது அவளுக்கு ஏழாவது மாதம்! முன் பிறந்த பிள்ளை முட்டி போடவில்லையே என்ற ஏக்கமும் ஒருசேர, தன் மகனின் ஜாதகத்தை ஜோசியரிடம் காட்டி, விபரம் கேட்க செல்கிறார்.

பெருந்தனக்காரர் தன் வீடுதேடி வந்ததைப் பார்த்து கைகூப்பி வரவேற்றார் ஜோதிடர்! சாந்தமூர்த்தி, ஜாதகத்தை எடுத்துக் கொடுத்து "இது என் மகன் ஜாதகம் மருமகளுக்கு பேறுகாலம் நெருங்குது; எப்படி இருக்கு; என்ன குழந்தைன்னு பார்த்து சொல்லுங்களேன்", என்றார்.

ஜாதகத்தை கையில் வாங்கிய ஜோதிடர், ஜாதக நோட்டைப் புரட்டியப்படி ஒரு காகிதத்தில் கணக்கு போட்டார்; போட்டுக்கொண்டே இருந்தார்! போதாக் குறைக்கு சோழிகளை உருட்டினர்! என்னென்னவோ எழுதினார்! அவருடைய செய்கையை பார்த்த சாந்தமூர்த்திக்கு இருப்பு கொள்ளவில்லை! ஏதோ வில்லங்கம் என்று மனதில் தோன்ற, ஏதும் புரியாமல் ஜோதிடரையே பார்த்துக்கொண்டிருந்தார்

சாந்தமூர்த்தியை அமைதியாக நிமிர்ந்து பார்த்த ஜோதிடர், தன் இடது கையால் கண்ணாடியைக் கழற்றி கீழே வைத்துவிட்டு, "அய்யா'இத' எப்படி'? என சொல்ல முடியாமல் தயங்கினார்!

மனதில் தோன்றிய பீதியை மறைக்க முயற்சித்தவாறே சாந்தமூர்த்தி, "என்ன ' சொல்லுங்க' ஜோசியரே! என்றார். வார்த்தைகளை வலிந்து வரவழைத்தார்.

தயங்கியபடியே ஜோதிடர், "அய்யா'. இப்ப பொறக்கப் போறதும் பையந்தான்'." இவர் முகத்தில் சற்றே மலர்ச்சி. "ஆனா'..மீண்டும் பதட்டம்! "என்'னங்'க? "ஆனா' வெடலப்புள்ளைங்க வெள்ளாம மாதிரி தான்!" என இழுக்க, "அப்படின்னா?"" எச்சிலை விழுங்கியபடி கேட்டார், சாந்தமூர்த்தி

தலை குனிந்தபடி ஜோசியர், "வீடு வந்து சேராது"'. என சொல்ல'.

பலமாகத் தாக்கப்பட்டவர் போல் நிலைகுலைந்தார் சாந்தமூர்த்தி! மெல்ல நிமிர்ந்து பார்த்த ஜோதிடர், "அய்யா இப்ப உங்க மருமக வயித்துல இருக்கற கொழந்த' பொறந்த பிறகு ஒரு நாழிக நேரம் இந்த உலகத்துல உயிரோட இருக்கறதே கஷ்டங்க!" என்றார்.

சாந்தமூர்த்தியின் கண்களில் கண்ணீர் திரண்டு கன்னங்களில் வழிந்தது! தன்னையும் அறியாமல் எழுந்து நின்றவர் , "எனக்கா' என் குடும்பத்துக்கா இந்த நெலம?"" என்றார்.

"உங்க மகனோட ஜாதகத்துல'" ஜோசியர் ஏதோ சொல்ல வர இடைமறித்து, அவனையும் நான் தப்பா வளர்க்கலையே' அவன் ஒழுக்கமா தானே இருக்கறான்;"

"இதல உங்க பையன் தப்பு எதுவும் இல்ல; பூர்வ புண்ணிய ஸ்தானம்'..

"அப்படின்னா'"

"முன்னோர்கள் செய்ததோ இல்ல முன் பிறவியில செய்ததோ'. தொடருது!"

"நானும் அப்படி ஒன்னும் தப்பு பண்ணதா'. ஞாபகம் இல்லையே"

" உங்க மகனே, முற்பிறவியில செய்திருக்கலாம். ஊழ்வினை யார தான் விட்டது!" எனத் தயங்கியவர், "அய்யா'. உங்க பேரனுக்கு மூணு வயசு ஆகுதில்லையா?...

"ஆமாம்" என்பது போல் மெல்ல தலையாட்டினார். "அந்தக் குழந்தையும் சரியா நடக்க முடியாம்" என இழுத்தார்!

"என்னய்யா சொல்றிங்க?" என அலறியே விட்டார் சாந்தமூர்த்தி! "அந்தக் கொழந்த'. கடைசிவர ஊனமா தான்'." சொல்லி முடிக்கவில்லை.

கத்திவிட்டார் சாந்தமூர்த்தி "போதும், போதும்! இனிமே நீங்க எதுவும் சொல்ல வேணாம்! உங்களுக்கு ஒன்னு தெரியுமா? வியாபாரத்திற்காக வாங்கி வந்த மாடு நடக்க முடியாம நொண்டியாய் போச்சி எல்லாரும் அடிமாட்டுக்கு கொடுத்திட சொன்னாங்க! ஆனா நான் ரெண்டு வருஷமா அதுக்கு வைத்தியம் பார்த்து நல்லா நடக்க வச்சி சமீபத்துல தான் வித்தேன்! ஒரு மாடு ஊனமா இருந்தாக்கூட என்னால தாங்க முடியாதே! எனக்கு ஏன் ஏன் இந்த நெலம? கதறினார்!

"இது தான் பகவானோட லீலைங்கறது! ஒரு வாயில்லா ஜீவனையே கண்ணாப் பார்த்துக்கிட்ட நீங்க மனுஷப் பிறப்ப நல்லா பார்த்துப்பேள் இல்லையா? யார, யாருகிட்ட ஒப்படைச்சா நல்லதுன்னு தெரிஞ்சிதான் கொடுத்திருக்கான் ஊழ்வினை யெல்லாம் கொஞ்சக் கொஞ்சமா கரைஞ்சுண்டு வர்றது இனி வரப்போற தலை முறையாவது நல்லா இருக்கட்டும்",

"பகவானோட லீலை" என்னும் வார்த்தைகள் சாந்தமூர்த்தியின் மனதை சாந்தப்படுத்தியது.

~ ரா. பன்னீர்செல்வம்



# ஹயக்ரீவர் எந்திரம்


கிரகிக்கும் தன்மையை மேம்படுத்தி கல்வியில் சிறந்து விளங்கச்செய்யும் ஹயக்ரீவர் எந்திரம்

நாம் பிறந்தது முதல் இறப்பு வரையிலும் அன்றாடம் வாழ்வில் கற்றுக் கொண்டே தான் இருக்கிறோம். நாம் கற்கும் கல்வி மற்றும் அனுபவ பாடமானது நம்முயற்சியால் கற்கப்பட்டு நம்முடைய அறிவில் கலந்து நம்முடனேயே வாழ்ந்து நாம் இறந்தவுடன் அழிந்துவிடக்கூடியது. நாம் கற்ற இந்த கல்வியையும் அனுபவ பாடத்தையும் மற்றவருக்கு சொல்லிக் கொடுபதினால் மட்டுமே நம்முடைய கல்வி ஞானம் அதிகரிக்கும். கல்வி ஞானத்தை வளப்படுத்தி அனைத்து கலைகளையும் திறம்பட  நாம் கற்க அருள் புரிபவர் கல்விக்கடவுள் சரஸ்வதி ஆவார். இந்த சரஸ்வதி தேவிக்கே குருவாக இருப்பவர் ஸ்ரீ ஹயக்ரீவர் ஆவார்.

மது மற்றும் கைடபர் எனும் அசுரர்கள் தேவர்களை துன்புறுத்தி வந்தார்கள். அந்த அசுரர்கள் படைக்கும் கடவுள் பிரம்மாவிடம் இருந்து வேத புத்தகங்களை திருடிக்கொண்டு போய் ஒளித்து வைத்துவிட்டனர். விஷ்ணு பகவான் குதிரை முகமும் மனித உடலும் தாங்கிய ஸ்ரீ ஹயக்ரீவர் எனும் அவதாரம் எடுத்து அசுரர்களிடம் போரிட்டு வேத புத்தகங்களை மீட்டு பிரம்மாவிடம் ஒப்படைத்தார். கல்வி மற்றும் கலைகளுக்கு அதிபதியான அன்னை சரஸ்வதியின் குருவாக ஸ்ரீ ஹயக்ரீவர் போற்றப்படுகிறார். கல்வி மற்றும் கலைகளை கற்க வழிவகை செய்யும் ஸ்ரீ ஹயக்ரீவர பெருமானை ஸ்ரீ ஹயக்ரீவ எந்திரம் கீழேகொடுக்கப்பட்டுள்ள எந்திரத்தை தினமும் முல்லை மலர் கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் கல்வி மற்றும் கலைகளில் சிறந்து விளங்கவும். பேச்சை பயன்படுத்தி தொழில் செய்பவர்களான ஆசிரியர்கள், பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், மேடை பேச்சாளர்கள் மற்றும் ஜோதிடர்களுக்கு வாக்குவன்மை அடையவும், வாக்குபலிதம் ஏற்படவும் இந்த ஸ்ரீ ஹயக்ரீவர் எந்திரத்தை தினமும் பூஜித்து வெற்றிவாகை சூடலாம்.

**ஸ்ரீ ஹயக்ரீவ எந்திரத்திற்குறிய மந்திரம்:**

"ஞானானந்தமயம் தேவம் நிர்மல
ஸ்படிகாக்ருதிம் ஆதாரம்
ஸர்வவித்யானாம் ஹயக்ரீவ முபாஸ்மஹே"



~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# மூலிகை ரகசியம்

## சிறு கண் பீளை

'சத்வித்யா'வின் இந்த இதழில் நாம் பார்க்கவிருக்கும் மூலிகை சிறு கண் பீளை என்கிற சிறந்த தாவரமாகும். இதன் பயன்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளும் முன் சில பொதுவான விஷயங்களை பார்ப்போம்.

இன்றைய அவசரகதியில் பெரியவர், சிறியவர் என்ற வயது வித்தியாசம் இல்லாமல் அனைவருக்கும் சிறுநீரக பிரச்சனைகள் வருவதை அறிவோம். ரசாயன கலப்புடன் கூடிய உணவு வகைகள், சரியான செரிமானம் இல்லாமை, நேரம் தவறிய உணவு என்கிற பல்வேறு காரணங்களால் சிறுநீரகம் கெடுவது, சிறுநீரகத்தில் கல் உண்டாவது என பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, சிறுநீரக கல்லால் வேதனைப் படுவோர் ஏராளம்! இது அறுவை சிகிச்சை செய்கின்ற அளவில் கொண்டு போய் விடுகிறது. இந்த அவஸ்தைகளைப் போக்கவும் வலியே இல்லாமல் சிறுநீரகக் கல்லை அகற்றவும் உதவுவதே இந்த சிறு கண் பீளை என்னும் மூலிகை!

இதன் வேர், தண்டு, பூக்கள் என அனைத்துமே மருத்துவ குணம் கொண்டவை. இந்த மூலிகை இன்னும் என்னென்ன பிரச்சினைகளை களைகிறது என்பதனை இப்போது பார்க்கலாம்.

### குணமாக்கும் நோய்கள்:

பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் ஏற்படும் பெரும்பாடு என்னும் அதிக ரத்தப் போக்கு, நீர்க்கடுப்பு, சிறுநீர் தாரையில் எரிச்சல், பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் நீர் கோர்ப்பதால் ஏற்படும் கால் வீக்கம் என பலவகையான நோய்களை குணமாக்கும் தன்மை கொண்டது இந்த சிறு கண் பீளை.



### பயன்படுத்தும் முறை:

இந்த மூலிகையை வேரோடு எடுத்து, வேரை துண்டுகளாக நறுக்கி, பூக்களையும் இலைகளையும் சேர்த்து கல்வத்தில் அரைக்க வேண்டும். அரைக்கும் போதே சிறிது நாட்டு சர்க்கரை சேர்த்து, பால் ஊற்றி எடுத்து காலை மாலை இருவேளை 50 மிலி வரை குடித்துவர, வலியே இல்லாமல் சிறுநீரக கல் கரைந்து விடும்.

வயல்வெளி மற்றும் புதர்களில் குளிர் மற்றும் பனிக்காலமான மார்கழி, தை போன்ற மாதங்களில் எங்கும் கிடைக்கும் இந்த மூலிகையை பயன்படுத்தி அறுவை சிகிச்சை இல்லாமல் அருமை சிகிச்சை என்ற அளவில் சிறுநீரக கல்லை கரைக்கலாம்.

~ ரா. பன்னீர்செல்வம்

# ஏப்ரல் 1 – 15 ராசி பலன்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்



## மேஷம்

- உத்தியோகத்தில் நீங்கள் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள்.
- சுய தொழில் செய்பவர்கள் ஒரே தொழிலில் முதலீடு செய்வது கூடாது. பிரித்து முதலீடு செய்வதன் மூலம் உங்கள் தொழில் விரிவதற்கான வாய்ப்பு உள்ளது.
- வெளிநாட்டு தொடர்பான தொழில் நடத்துபவர்களும் சிறந்த ஆதாயம் காண்பார்கள்.
- மாணவர்கள் இந்த மாதம் கல்வியில் பளிச்சிடுவார்கள். சிலருக்கு கல்வி உதவிப் பணம் கிடைக்கும். மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்படுவார்கள். இந்த மாதம் மாணவர்களுக்கு நம்பிக்கை தரும் மாதமாக இருக்கும்.
- உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பிரச்சினைகள் வந்து போகும். அஜீரண கோளாறு மற்றும் குடல் சம்மந்தப்பட்ட பிரச்கனைகள் வரலாம். ஆரோக்கிய உணவு உண்பதின் மூலமாக வயிறு சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் வராமல் தடுக்கலாம்.
- காதலில் வெற்றி கிடைக்கும். காதலர்களுக்கிடையே அன்யோன்யம் அதிகாரிக்கும்.
- கணவன் மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். தாம்பத்திய உறவில் நல்லிணக்கம் கூடும்.
- தாயாருக்கு உடல் நல குறைவு ஏற்படலாம். கவனம் தேவை.



# ரிஷபம்

- இந்த மாதம் உத்தியோகத்தில் நீங்கள் சில தவறுகளைப் புரிவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே நீங்கள் கவனமுடன் பணியாற்ற வேண்டும்.
- கூட்டுத் தொழில் செய்பவர்கள், சுமுகமான முறையில் தொழில் நடக்கவும் தொழிலில் வெற்றி காணவும்  கவனமுடன் செயல்பட வேண்டும்.
- பணப்புழக்கம்  தாராளமாக இருக்கும். தகவல்  தொடர்பு மூலம் நீங்கள் வெளிநாடு மற்றும் உள்நாட்டு வாடிக்கையாளர்கள் மூலம் வருமானம் பெறுவீர்கள்.
- மாணவ மாணவியர்கள் அதிக கவனத்துடன் அதிக நேரம் படிக்க நேரும் என்பதால் தங்கள் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.
- காதல் உறவில் உள்ளவர்கள் வேலையை விட அன்பிற்கு முக்கியத்துவம் அளிப்பார்கள்.
- கணவன் மனைவி உறவு சிறக்கும்.
- உடன்பிறந்தவர்களுடன்  கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. கவனம் தேவை.
- இந்த மாதம் நிலம் அல்லது சொத்து வாங்கும் யோகம் உண்டு.  கடன் வேண்டி விண்ணப்பித்திருந்தால் அது கிட்டும்.
- குடும்பத்தில்  சுபநிகழ்ச்சிகள், விருந்து மற்றும் விசேஷங்கள் நடக்கும்.



# மிதுனம்

- புதிதாக வேலைக்கு சேர்ந்திருப்பவர்களுக்கு சிறிது பதட்டநிலை இருக்கும். வெளியிடங்களுக்கு சென்று வேலை பார்க்க வேண்டிய சூழல் ஏற்பட வாய்ப்புள்ளது.
- புதிய தொழிலில் முதலீடு செய்வீர்கள். அல்லது பழைய தொழிலை விரிவாக்கம் செய்வீர்கள்.
- பழைய சொத்துக்கள் அல்லது பழைய வண்டி வாகனகங்கள் வாங்கும் வாய்ப்பு உள்ளது.
- மாணவர்கள் படிப்பில் கவனம் சிதறும் வாய்ப்புகள் உள்ளது. பொறுப்புடன் படிப்பது நலம்.
- உயர்கல்வி மாணவர்கள் தேர்வில் வெற்றி பெறுவர்.
- வெளிநாட்டில் உயர்கல்வி படிப்பதற்கான வாய்ப்புகள் கிடைக்கும்.
- கணவன் மனைவிக்கு இடையே இணக்கம் கூடும்.
- புதிய வீடு மாறுவதற்கு இந்த மாதம் சிறந்த மாதமாகும்.
- குடும்பச் சூழல் மகிழ்ச்சி தரும் வகையில் இருக்கும். பணம் மற்றும் பொது விஷயங்கள் குறித்து இதுவரை குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் யாவும் சீராகும்.
- அஜீரண கோளாறுகள் வர வாய்ப்புள்ளது. துரித உணவுகளை தவிப்பது நன்மை பயக்கும்.



# கடகம்

- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும்.
- சக பணியாளர்களிடம் சுமூகமான உறவு நீடிக்கும்.
- மாணவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். மாணவர்கள் கவனமுடன் படிப்பார்கள்.
- உயர்கல்வி படிப்பவர்களுக்கு சில தடைகள் இருந்தாலும் இந்த மாத கடைசி பகுதியில் படிப்பில் ஏற்றம் காண்பார்கள்.
- கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும். அன்னியோன்யம் பெருகும்.
- உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் நல்ல சுமுகமான உறவு நிலை இருக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்..
- குடும்ப உறவுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பீர்கள். குடும்பத்தில் ஏற்படும் சில பிரச்சினைகளை நீங்கள் தீர்க்கவேண்டியிருக்கும்.
- குடும்பப் பொறுப்புகளை மேற்கொள்வதன் மூலமும் குடும்ப உரவுகளின் தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலமும் உங்கள் உறவு வலுப்படும்.
- பங்கு வர்த்தகத்தில் முக்கியமான முடிவுகள் எதையும் இந்த மாதம் எடுக்காதீர்கள். ஏனெனில் அதில் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.
- ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



# சிம்மம்

- உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வார்கள். உங்கள் பணியிடத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வீர்கள். அதில் சிறந்து விளங்குவீர்கள்.
- வெளிநாட்டில் வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும்.
- இந்த மாதம் உங்களின் பொருளாதார நிலை சிறப்பாக இருக்க வாய்ப்புகள் உண்டு.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் இந்த மாதம் சிறப்பாக கல்வி பயில்வார்கள்.
- இந்த மாதம் நீங்கள் குடும்பத் தொழிலை விரிவு படுத்த பணத்தை முதலீடு செய்வீர்கள்.
- இந்த மாதம் புதிய ஆடைகள் மற்றும் வாகனங்கள் வாங்குவீர்கள்.
- அதிக ஆடம்பர செலவுகளைச் செய்யாமல் செலவை கட்டுபடுத்துங்கள். பட்ஜெட் அமைத்து செலவுகளை மேற்கொள்ளுவது நன்மை பயக்கும்.
- கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் வந்து போகும். பேச்சில் கவனம் தேவை.
- குடும்ப வாழ்க்கை சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் அன்பும் அமைதியும் நிலவும்.
- அஜீரணம் போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உடல்நலனில் அக்கறை தேவை.



# கன்னி

- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிட்டும். தன நிலையில் ஏற்றம் இருக்கும்.
- இந்த மாதத்தில் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். இந்த மாதம் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் கிட்டும்.
- மாணவ மாணவியர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாக இருக்கும். விடாமுயற்சியுடன் கல்வி பயின்று வெற்றி காண்பார்கள்.
- திருமணமான அன்பர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்கி அவர்களுடன் கலந்து உறவாடுவதன் மூலம் உறவு வலுப்படும்.
- நண்பர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள்.
- கலை மற்றும் இசையின் மீது ஆர்வம் கூடும்.
- தங்களின் வேலை மற்றும் நிதிநிலையில் முக்கிய மாறுதல்கள் ஏற்படும்.
- இந்த மாத பிற்பகுதியில் பெரிய அளவிலான ஆரோக்கிய பாதிப்புகள் இல்லாவிட்டாலும் சிறு சிறு உடல் உபாதைகள் வந்து போகும்.
- தினமும் உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை பாதுகாத்துக் கொள்ள முடியும்.



# துலாம்

- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணியில் உங்கள் படைப்பாற்றல் வெளிப்படும். உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படும்.
- வேலை நிமித்தமாக வெளி நாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.
- சுயதொழிலில் இந்தமாதம் அதிக லாபங்களை எதிர்பார்க்க முடியாது.
- கூட்டுத் தொழிலில் வெற்றி காண இயலும்.
- ஏற்றுமதி இறக்குமதி போன்ற வெளிநாடு தொடர்புடைய தொழில் புரிபவர்கள் அதிக லாபங்களை எதிர்பார்க்கலாம்.
- இந்த மாதம் ஆடம்பர செலவுகளை தவிர்த்து அத்தியாவச செலவுகளை மேற்கொள்வது நன்மை பயக்கும்.
- மாணவர்கள், ஆசிரியர் மற்றும் பெற்றோரின் ஆலோசனைகளைக் கேட்பதன் மூலம் சிறந்த பலன்களைப் பெறுவீர்கள்.
- உயர் கல்வி படித்து முடிக்கும் நிலையில் இருக்கும் மாணவர்கள் வேலை கிடைக்கப் பெறுவீர்கள்.
- கணவன் மனைவி பரஸ்பரம் அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் நல்லிணக்க உறவு மேற்கொள்ள முடியும்.
- தாய் மற்றும் தந்தையின் நலனில் அக்கறை தேவை.
- உங்கள் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. கால் மூட்டு சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படும். மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் அளவிற்கு பெரியதாக இருக்காது.



# விருச்சிகம்

- உத்தியோகம் நிமித்தமாக வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பு ஏற்படும்.
- உங்கள் முதலீடுகள் வளர்ச்சி காணும். கடன்களை அடைப்பீர்கள்.
- தங்களின் புதிய சுயதொழிலும், தொழில் கூட்டாளிகளும் வளர்ச்சி காண்பார்கள்.
- வேலையில் உள்ள தங்களின் எதிர் கால திட்டம் குறித்து உங்கள் மேலதிகாரிகளுடன் கலந்து ஆலோசிப்பீர்கள்.
- சுயதொழிலில் லாபம் அதிகரிக்கும். தன வரவில் ஏற்றம் அதிகரிக்கும்.
- அரசுத் துறை சார்ந்து தொழில் செய்பவர்கள் இந்த மாதம் சிறந்த முன்னேற்றம் காண்பீர்கள். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.
- மாணவர்கள் கவனச் சிதறல் போன்ற தடைகளையும் தாண்டி கல்வியில் முன்னேறுவார்கள். தேர்வுகளை சிறப்பாக எழுதி நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள்.
- திருமணமான தம்பதிகளுக்கிடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.
- இந்த மாதம் உங்கள் மனதில் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.
- உங்கள் ஆரோக்கியம் இந்த மாதம் சிறப்பாக இருக்கும் என்றாலும் மனதில் சிறிது பதட்ட நிலை இருக்கும்.



# தனுசு

- கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும்.
- காதல் உறவில் இருப்பவர்களுக்கு கருத்து வேறுபாடுகள் காரணமாக வாக்குவாதங்கள் எழும்.
- இளவயது அன்பர்களின் மனதில் காதல் அரும்பும் தெய்வீகக் காதலாக இருக்கும். எனவே நீங்கள் உங்களைப் போலவே நேர்மையாக இருக்கும் துணையை நாடுவீர்கள். நீங்கள் பணி புரியும் இடத்தில் அல்லது ஆலயத்தில் உங்களுக்கான துணையைக் கண்டு கொள்ளும் வாய்ப்பு உள்ளது.
- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணியில் சில பின்னடைவுகளும் சவால்களும் காணப்படும். என்றாலும் இந்த மாதத்தின் கடைசி பகுதியில் பணியிடப் பிரச்சினைகள் தீரும். அதிக பணிகள் காரணமாக உங்கள் மனதில் பதட்ட நிலை இருக்கும்.
- கூட்டுத் தொழில் செய்பவர்கள் நன்மை தீமை கலந்த பலன்களைப் பெறுவார்கள்.
- புதிய தொழில் ஒப்பந்தங்கள் கிடைக்கும். உங்கள் தகவல் தொடர்புத் திறன் அதிகரிக்கும். உங்கள் பெயரும் புகழும் ஓங்கும். நீங்கள் எதிர் பாராத திசையில் இருந்து தொழில்வாய்ப்புகள் வரும்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் மேம்படும். என்றாலும் மனதில் காணப்படும் பதட்டம் காரணமாக இனம் புரியாத உடல் உபாதைகள் ஏற்படும். யோகா மற்றும் தியானம் மற்றும் இறை வழிபாடு மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் சீராக தக்க வைத்துக் கொள்ளமுடியும்.



# மகரம்

- உத்தியோகத்தில் பதவி உயர்வு கிடைக்கும். வருமானம் உயரும். பிறருக்கு கடன் அளிக்கும் விஷயத்தில் கவனமாக இருக்கவும்.
- உத்தியோகத்தில் மேலதிகாரிகளுடன் சில பிரச்சினைகள் எழ வாய்ப்பு உள்ளது.
- சுயதொழிலில் ஏற்றம் கிடைக்கும்.
- குடும்ப உறுப்பினர்களுடன் சிறு சிறு பிரச்சினைகள் தோன்றினாலும் அது பெரிய அளவில் பாதிப்பை அளிக்காது.
- உங்கள் தோற்றத்தில் வனப்பு கூடும். வாழ்வில் முன்னேற்றம் கிட்டும்.
- காதல் உறவில் இருப்பவர்களுக்கு கருத்து வேறுபாடுகள் உண்டாகும்.
- காதல் துணையுடன் வாக்கு வாதத்தில் ஈடுபடாதீர்கள்.
- உங்கள் திருமண உறவு மற்றும் வாழ்க்கை சிறக்க கிரக நிலைகள் சாதகமாக உள்ளது.
- இந்த மாதம் உங்கள் நிதிநிலை மகிழ்ச்சி தரும் வகையில் இருக்கும். வீடு மராமத்து செலவுகளை மேற்கொள்வீர்கள்.
- இந்த மாதம் நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். வெளிநாடுகளில் வேலை தேடுபவர்களுக்கு இந்த மாதம் சாதகமாக இருக்கும்.
- அரசுத் துறை மற்றும் வங்கித் துறையில் இருப்பவர்களுக்கு. வேலை தேடுபவர்களுக்கு இந்த மாதம் வேலை கிட்டும்.
- உங்கள் ஆரோக்கியம் சுமாராக இருக்கும். பெரிய அளவிலான உடல் நல பாதிப்புகள் ஏதும் இருக்காது.



# கும்பம்

- உத்தியோகம் நிமித்தமாக வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணிச்சுமை கூடும்.
- நிதிநிலையைப் பொறுத்தவரை சாதகமான நிலை காணப்படும். உங்களில் சிலர் வேலை மாற்றங்களை விரும்புவீர்கள்.
- திருமணம், குழந்தைப் பிறப்பு போன்ற சுப காரியங்களுக்கான விரயங்கள் ஏற்படலாம்.
- பயணத்திற்காகவும் நீங்கள் பணத்தை செலவு செய்ய நேரும்.
- மன அழுத்தம் காரணமாக  மற்றும் தவறான உணவு முறை காரணமாக அஜீரணக் கோளாறுகள் ஏற்படும். மற்றபடி பெரிய அளவிலான பாதிப்புகள் ஏற்படாது.
- திருமணமான தம்பதிகளுக்கு தாம்பத்யதில் நல்லிணக்கம் கூடும்.
- அதிக பணிகள் காரணமாக உங்களால் குடும்பத்திற்கென அதிக நேரத்தை ஒதுக்க இயலாது.
- வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதால் நீங்கள் சில காலம் உங்கள் குடும்பத்தை விட்டுப் பிரிய வேண்டியிருக்கும்.



# மீனம்

- குழந்தைகளுடனான உறவு வலுப்படும். குடும்பத்தில் அமைதி நிலவும்.
- இந்த மாதம் குடும்ப உறவுகள் சிறப்பாக இருக்கும். குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும். நீங்கள் புத்திசாலித்தனமாக செயல்பட்டு அவற்றை சமாளிப்பீர்கள்.
- உத்தியோகத்தில் உடன் வேலை செய்பவர்களிடம் நல்லிணக்கம் கூடும்.
- சுயதொழிலில் லாபம் கூடும்.
- கூட்டுத் தொழிலில் ஏற்றம் உண்டாகும். புதிய தொழில் கூட்டாளிகளை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும்.
- புதிய தொழில் முயற்சி வெற்றி தரும்.
- இந்த மாதம் உங்கள் பொருளாதாரம் நம்பிக்கை தரும் வகையில் இருக்கும்.
- வீட்டு பராமரிப்பு செலவுகள் கூடும்.
- இந்த மாதம் உங்கள் மனதில் துடிப்பும் உற்சாகமும் காணப்படும்.
- கழுத்து வலி மற்றும் முதுகு வலி போன்ற பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

அனைத்து ஜோதிட, புரோஹித மற்றும் ஆன்மிக சேவைகளுக்கு
தொடர்புகொள்ள: **88702 88701**